# கோத்தகிரி ஆதிவாசி கிராமங்களில் தலைமை வனப் பாதுகாவலர் ஆய்வு

கோத்தகிரி, டிச. 24-

கோத்தகிரி கீழ்கூப்பு ஆதிவாசி கிராமத்தில் மாநில முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் ஸ்ரீதர் ஆய்வு மேற்கொண்டார்.

கோத்தகிரி பகுதியில் வனத்துறை மூலம் ஆதிவாசி கிராமங்களுக்கு பல்வேறு நலத் திட்டங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இதன் ஒருகட்டமாக, கீழ்கூப்பு ஆதிவாசி கிராமத்தில் 18 ஏக்கர் பரப்பளவில் ரூ.3.18 லட்சம் மதிப்பில், கடந்த 2003ம் ஆண்டு சோலார் மின் வேலி அமைக் கப்பட்டது. இந்த வேலியை, வாரம் ஒரு குடும்பம் என்ற அடிப்படையில் ஆதிவாசி மக்கள் பராமரித்து வருகின்றனர். இந்த வேலி அமைக்கப்பட்டதால், இக்கிராமத்துக்குள் வனவிலங்குகளின் வருகை தடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், இப்பகுதியில் தேயிலை, காபி, குருமிளகு, மக்காச்சோளம் மற்றும் குச்சிக்கிழங்கு போன்ற விவசாய பயிர்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

மேல் கூப்பு மற்றும் கோழித்துறை ஆகிய ஆதிவாசி கிராமங்களிலும், சோலார் மின்வேலி அமைத்து கொடுத்துள்ள வனத்துறையினர், இப்பகுதியில் உள்ள 120 வீடுகளுக்கு, இலவச மின்வசதியையும் ஏற்படுத்தி கொடுத்துள்ளனர். நீலகிரி வடக்கு வனக்கோட்டம் கோத்தகிரி வனச்சரகத்திற்கு உட்பட்ட இப்பகுதியில், மாநில முதன்மை தலைமை வன பாதுகாவலர் (வன உயிரியல்) ஸ்ரீதர் ஆய்வு மேற்கொண்டு, வனத்துறை மூலம் செயல்படுத்தி வரும் திட்டங்களை மக்களிடம் கேட்டறிந்தார். கோழித்துறை பகுதியில் பாலம் அமைத்து தர வேண்டும் என இப்பகுதி மக்கள் இவரிடம் கோரிக்கை விடுத்தனர். நிதி நிலையை பொறுத்து நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்தார். மேலும், இப்பகுதி மக்கள் 20 பேருக்கு விவசாய உபகரணங்களையும் அவர் வழங்கினார்.

தொடர்ந்து, செம்மனாரை பகுதியில் கோத்தகிரி 'கீ ஸ்டோன்' பவுண்டேஷன் சார்பில் ஆதிவாசி மக்களுக்காக நடத்தப்பட்டு வரும் கைத்தொழில் மையத்தை பார்வையிட்டார். நிகழ்ச்சியில், கோவை மண்டல வனப்பாதுகாவலர் புர்வார், கோத்தகிரி ரேஞ்சர் ஜெயராஜ், கீஸ்டோன் பவுண்டேஷன் இயக்குனர் பிரதீம்ராய், ராபர்ட் லியோ, மில்லர் அசோக் உட்பட வனத்துறையினர் பலர் கலந்து கொண்டனர்.